கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டின் வளர்ச்சி 9.69% உயர்வு!

முதல்வர் மு.க.ஸ்டாலினின் பல்வேறு முயற்சிகளுக்குக் கிடைத்திருக்கும் சான்று!

தூத்துக்குடியில் அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!

தூத்துக்குடி, ஏப்.6

நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று (05.04.2025) தூத்துக்குடியில் செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:-

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில், தமிழ்நாடு மிக முக்கியமான பங்களிப்பினை வகிக்கிறது என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்திற்கு நாம் 9 சதவீதம் அளித்துக் கொண்டு வரக்கூடிய நிலையில், இன்றைக்கு ஒன்றிய அரசினுடைய Statistics and Programe Implementation துறையின் சார்பில் வெளியிடப்பட்டிருக்கக்கூடிய ஆய்வறிக்கை வந்திருக்கிறது.

அந்த ஆய்வறிக்கையின் படி, நிலைத்த விலை விகிதங்களில் (constant prices) தமிழ்நாட்டினுடைய வளர்ச்சி என்பது இன்றைக்கு 9.69 சதவீதமாக அதிகரித்திருக்கிறது என்று அந்த அறிக்கை தெரிவித்திருப்பது மிக முக்கியமான மிக சிறப்பான ஒன்று என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

9.69 சதவிகிதம் என்பது கடந்த 10 ஆண்டுகளில் நீங்கள் பார்த்திருக்கிறீர்கள் என்று சொன்னால், இந்த வளர்ச்சி நிச்சயமாக எட்டப்பட முடியாத ஒரு வளர்ச்சி. நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தெளிந்த வழிகாட்டுதல்கள். முதலமைச்சர் அவர்கள் கடந்த 4 ஆண்டுகளில் எடுத்து இருக்கக்கூடிய பல்வேறு முயற்சிகளின் காரணமாக, நமக்கு இந்த மிகப்பெரிய வளர்ச்சி கிடைத்திருக்கிறது.

அதன் வகையில் நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால், கடந்த ஆண்டில், நம்முடைய பொருளாதாரம் என்பது 15.73 லட்சம் கோடியாக இருந்த அந்த பொருளாதாரம், இன்றைக்கு 17.23 லட்சமாக இந்த ஆண்டிலே அது உயர இருக்கின்றது.

இந்த 9.69 சதவிகிதத்தில் (constant price) வரக்கூடிய இந்த வளர்ச்சி என்பது நீங்கள் nominal priceலிருந்து நீங்கள் எடுத்துக் கொண்டீர்கள் என்று சொன்னால், அதாவது பணவீக்கத்தை (inflation) உருவாக்கி, நீங்கள் எடுத்துக் கொண்டால் அது 14 சதவீதமாக இருக்கும். பணம் நீக்கம் இல்லாமல் அந்த constant priceல் எடுத்துக்கொண்டால் 9.69 சதவீதமாகும்.

இது தமிழ்நாட்டில் அரசு இந்த ஆண்டு நம்முடைய பட்ஜெட்டைக் கொடுப்பதற்கு முன்பாக Economic Survey ரிப்போர்ட் ஒன்றை நாம் வெளியிட்டிருந்தோம். அந்த Economic Survey ரிப்போர்ட்டில் நாம் என்ன வளர்ச்சி விகிதத்தை குறிப்பிட்டிருந்தோமோ அந்த வளர்ச்சி விகிதத்தை தொடக்கூடிய அளவிற்கு இது வந்திருக்கிறது.

இந்த வளர்ச்சி விகிதம் என்பது அதில் சுட்டிக்காட்டியிருப்பது போல, 8 சதவிகிதம் நாம் அதை சுட்டிக்காட்டி இருந்தோம். ஆனால், இன்றைக்கு 9.69 சதவீதமாக அந்த வளர்ச்சி விகிதமாக கூடியிருக்கிறது. அதைப்போல, ரங்கராஜன் அவர்கள் ஒரு சிறந்த பொருளாதார நிபுணர், அதைப்போல, கே.ஆர்.சண்முகம் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் சொல்லி இருப்பது போல, அது 9.3 சதவீதமாக இருக்கும் என்று அவர்கள் சொல்லியிருந்தார்கள். அதையும் சிறப்பாக செய்து நாம் 9.69 சதவிகிதமாக நாம் இன்றைக்கு வந்திருக்கிறோம்.

இதில் மூன்று முக்கியமான துறைகளில் முதலாவதாக வகிக்கக்கூடிய விவசாயம், இரண்டாவது துறையாக இருக்கக்கூடிய நம்முடைய உற்பத்தித் துறையாக இருந்தாலும் சரி அல்லது மூன்றாவது துறையாக இருக்கக்கூடிய நம்முடைய சர்வீசஸ் துறையாக இருந்தாலும் சரி, இவற்றில் விகிதங்களை பார்க்கின்றபோது சர்வீசஸ் துறை நமக்கு மிகுந்த பங்களிப்பினை அளித்திருக்கிறது.

அதைப்போல, நம்முடைய உற்பத்தித் துறையும் அதற்கான குறிப்பிடத்தகுந்த அளவில் ஒரு பங்களிப்பை அளித்திருக்கிறது. இந்த வளர்ச்சி என்பது இந்த விகிதத்தில் நாம் செல்கிறோம் என்று சொன்னால், நாம் ஏற்கனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, நாம் 2030-ஆம் ஆண்டில் ஒரு ட்ரில்லியன் டாலர் economyயை நாம் பெறக் கூடிய அளவிற்கு இந்த வளர்ச்சி விகிதம் நம்மை இட்டுச் செல்லும்.

இது முதலமைச்சர் அவர்களுடைய Vision - அவருடைய தொலைநோக்குப் பார்வை. அவர் எடுத்திருக்கக்கூடிய பல்வேறு முயற்சிகள் தமிழ்நாட்டினுடைய பொருளாதார மேம்பாட்டிற்கு அவர்கள் செய்திருக்கக் கூடிய தொழில் முதலீடுகளை நம்முடைய நாட்டுக்கு கொண்டு வருவது உள்ளூரிலேயே தொழில் செய்வதை மிகுந்த எளிமைப்படுத்துகின்ற வகையில் அவர் எடுத்திருக்கின்ற முயற்சிகளுக்கு இது மிகுந்த ஒரு சான்றாக அமைந்திருக்கிறது.

மக்களுடைய நலவாழ்வில் அக்கறை கொண்டு அவர் எடுத்திருக்கக் கூடிய இந்த முயற்சிகள் எல்லோரையும் ஒருங்கிணைத்திருக்கக்கூடிய அந்த வளர்ச்சி என்பதும் இந்த பொருளாதார வளர்ச்சிக்கு அடிகோளாக மாறி இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதன் வாயிலாக, நம்முடைய ஒட்டுமொத்த பொருளாதாரம் என்பது இன்றைக்கு மிகப்பெரிய வளர்ச்சியை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை செய்தியாளர்களை சந்திக்கும் வாயிலாக நான் மிகுந்த மகிழ்ச்சியோடு உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டியளித்தார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஆர்.பாபு (எ) சந்திரசேகரன் தலைமை!

எழும்பூர் தெற்கு பகுதி 58 'அ' வட்டம் சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழா புகழரங்கம்!

ஆர்.எஸ்.பாரதி - திண்டுக்கல் ஐ.லியோனி - புதுக்கோட்டை விஜயா - புலவர் ராமலிங்கம் - விஜய் டி.வி. கோ.பழனி சிறப்புரை!

சென்னை, ஏப்.6-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் 72 வது பிறந்தநாள் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு - எழும்பூர் தெற்கு பகுதி 58அ வட்டம் சார்பாக, மாபெரும் புகழரங்கம் - கழக அமைப்புச் செயலாளர் திரு.ஆர்.எஸ்.பாரதி, கழக கொள்கை பரப்புச் செயலாளர், திண்டுக்கல்ஐ.லியோனி, தலைமை கழக பேச்சாளர் புதுக்கோட்டை விஜயா, புலவர் ராமலிங்கம், விஜய்.டிவி.கோ.பழனி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் -42 மகிழ்வே மக்கள் கண்டது! மாநிலம் உயர்ந்து நின்றது!! எனும் தலைப்பில் எழும்பூர் தெற்கு பகுதி 58அ வட்டம் சார்பாக மாபெரும் புகழரங்கம் நேற்று (05.04.2025 - சனிக்கிழமை) மாலை 6 மணியளவில், சென்னை, சூளை, சாமிபிள்ளை தெருவில் நடைபெற்றது.

இப்புகழரங்கத்தில் 58அ வட்ட கழக செயலாளர் ஆர்.பாபு (எ) சந்திரசேகரன் தலைமை வகித்தார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வி.சுதாகர், சொ.வேலு எம்.சி, கோ.ஏகப்பன், பா.ஸ்ரீராமுலு எம்.சி, கே.எஸ்.எம்.நாதன், ராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி, அ.நிர்மலாதேவி, பரிதிஇளம்சுருமி எம்.சி, எல்.சுந்தர்ராஜன் எம்.சி, பாஃத்திமா முசாஃபர் எம்.சி, எஸ்.ரசூல், டி.வி.வேலு, எம்.மலர்மாறன், கே.அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், வி.விஜயகுமார், எஸ்.டால்பின்ஹரி, இ.மொய்தீன், வான்மதிகதிரவன், ஜெ.கிருஷ்ணமூர்த்தி, து.களரிமுத்து, எஸ்.ராஜதுரை, ஆர்.ஸ்ரீதர் முன்னிலை வகித்தார்.

வெ.மருதன், ஜி.விஜயன், சி.சரளா, க.பன்னீர்செல்வம், வி.தட்சிணாமூர்த்தி, ச.குமார், ல.முரளி, கோ.ரவி வரவேற்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் கழக அமைப்புச் செயலாளர் திரு.ஆர்.எஸ்.பாரதி, கழக கொள்கை பரப்புச் செயலாளர், திண்டுக்கல் திரு.ஐ.லியோனி, தலைமை கழக பேச்சாளர் புதுக்கோட்டை விஜயா, புலவர் ராமலிங்கம், விஜய்.டி.வி. கோ.பழனி வழங்கி சிறப்புரையாற்றினார்.

மேலும், இப்புகழரங்கத்தில், பி.எம்.யாழினி, மாநில நிர்வாகிகள் கே.எஸ்.இரவிச்சந்திரன் புனிதவதி எத்திராசன் எம்.சி, க.வினோத் எழும்பூர் வடக்கு பகுதி நிர்வாகிகள்: எம்.தில்லைகுமார் பி.சி.சம்பத்குமார் ஜெ.கே.கருணாகரன் கே.வள்ளி சூளை சுப்பராயலு எழும்பூர் வடக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: தி.தயாளன் வி.அபாய் சு.மனோகர் ந.பாலு ஆர்.எம்.ரங்கநாதன் சி.சேகர். எழும்பூர் தெற்கு வடக்கு பகுதி மாவட்ட பிரதிநிதி: எஸ்.துலுக்காணம் ஆர்.நித்தியராஜ் மு.ஜெயகுமார் எம்.ரமேஷ் ம.வெற்றிவீரன் தனஇளங்கோ ஏ.கே.ரபிக் பேக் த.செபஸ்டின் இரா.ஜெயசங்கரன் டி.கிருஷ்ணன் மா.காந்தி டி.கே.விஜயராஜ் LIC.டி.கர்ணா மு.முரளிதரன் எஸ்.நாராயணன் மு.கமலக்கண்ணன் மாவட்ட பிற அணி துணை அமைப்பாளர்கள்: எம்.பி.குணசேகரன் Dr.பெ.வெற்றிகுமார் எட்வின் ஆர்.சூரியரகு எம்.வெற்றிவேலன் விஜய்ராதாகிருஷ்ணன் எம்.முத்து அ.தங்கசெல்வம் எஸ்.முத்து இப்ராஹிம் ந.கிருஷ்ணன் கே.ஜெயகுமார் என்.ராஜேஷ்குமார் அமுல்பாண்டியன் ஜெ.தேவகிருபை .ஜெ.கார்த்திகேயன் ரா.மணிகண்டன் த.பிரிதிவிராஜ் பி.நவின் ரகிபுல்லா(எ) ஸகுர் மா.மதியழகன், க.ராஜ்குமார், எஸ்.செல்வி ஜெ.மொகிந்தர் அமர்நாத் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இப்புகழரங்கத்தில் வட்ட கழக செயலாளர் இ.ரவிசந்திரன் நன்றி கூறினார்.

தமிழ்நாட்டில் 178 இடங்களில் - மின் நுகர்வோர் குறை தீர்க்கும் சிறப்பு முகாம்களில் பொதுமக்கள் புகார்கள்மீது உடனடித் தீர்வு!

பழுதான மின் மீட்டர்கள் - மின் கம்பங்கள் ஒரு வாரத்திற்குள் சரிசெய்யப்படும்!

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தகவல்!

சென்னை, ஏப்.6

மின் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நாள்தோறும் நலத்திட்டங்கள் வழங்கிடும் நல்லாட்சி நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, நேற்று காலை 11.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மின்வாரிய செயற்பொறியாளர் கள்/ இ&ப (Executive Engineer / O&M Office) அலுவலகங்கள் என 178 இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மின் நுகர்வோர் குறை தீர்க்கும் சிறப்பு முகாம்களின் வாயிலாக, மின் கட்டண குறைபாடு (பெறப்பட்ட புகார்கள் 1394, தீர்வு காணப்பட்ட புகார்கள் 675), மின் அளவி குறைபாடு (பெறப்பட்ட புகார்கள் 371, தீர்வு காணப்பட்ட புகார்கள் 203), சேதமைடந்த மின் கம்பங்கள் (பெறப்பட்ட புகார்கள் 2278, தீர்வு காணப்பட்ட புகார்கள் 18), குறைந்த மின் அழுத்தம் (பெறப்பட்ட புகார்கள் 1532, தீர்வு காணப்பட்ட புகார்கள் 12), பெயர் மாற்றம் உள்ளிட்ட மற்ற புகார்கள் (பெறப்பட்ட புகார்கள் 5447, தீர்வு காணப்பட்ட புகார்கள் 1068) என மொத்தமாக 11022 புகார்கள் பெறப்பட்டு, உடனடியாக 1976 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது..

மேலும், பழுதடைந்த மின் மீட்டர்கள் வரும் செவ்வாய்க்கிழமைக்குள் மாற்றப்படும் என்றும், பழுதான மின் கம்பங்கள் 15 நாட்களுக்குள் மாற்றப்படும் என்றும், மேலும் மின் கட்டண வேறுபாடு குறித்த புகார்களுக்கு ஒரு வாரத்திற்குள் தீர்வு காணப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் எம் எஸ். சுகுமார். ஏற்பாட்டில் மக்கள் தாகம் தீர்க்க தண்ணீர் பந்தலை அமைச்சர். ஆர். காந்தி திறந்து வைத்தார். உடன் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ., சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், மாநகர செயலாளர். சி.கே.வி. தமிழ்ச்செல்வன், மாவட்ட பொருளாளர் சன் பிராண்டு ஆறுமுகம், மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், பகுதி செயலாளர் கே. திலகர், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் திருமதி. நித்யா சுகுமார் உள்ளிட்டபகுதி செயலாளர், மாநகர நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில்

முதலமைச்சர் பிறந்தநாள் விழா - மாநில அளவிலான மாபெரும் கபடி போட்டி!

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., கலாநிதி வீராசாமி எம்.பி. பங்கேற்பு!

மாதவரம், ஏப்.6-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் மாநில அளவிலான கபடி போட்டி நடைபெறுகிறது.

மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம் வட பெரும்பாக்கம் பேருறிஞர் அண்ணா சமுதாய கூட வளாகத்தில் இன்று (6.4.2025 - ஞாயிறு) காலை 7 மணிக்கு நடைபெறுகின்ற இந்த மாபெரும் மாநில அளவிலான கபடி போட்டியை பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாடு செய்துள்ளார்.

17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், வட்டச் செயலாளர்கள் கே. அங்குசாமி, இ. கண்ணப்பன், மாத்தூர் கா. தாமரைச்செல்வன், பி. எஸ். சந்துரு, வி.ஆர். குப்பன் வ வேற்கிறார்கள்.

மாதவரம் வடக்கு பகுதி நிர்வாகிகள் வி. திராவிட வீரன், கே. சிவசங்கரன், ஆ. ராஜேந்திரன், கௌரி, ஆர் .முரளி, க. காசிநாதன், பி. நிர்மல் குமார்,கே. செல்வன்,நா. மோகன் குமார் நாகூர், வி. கார்த்திகேயன்,பா. சந்திரன், கே. ராஜா, நந்தினி சண்முகம், வட்ட நிர்வாகிகள் ஏ. கோவிந்தராஜ், சிடி ஸ்டாலின், சி. பாலாஜி, பி .லதா, வா. பார்த்தசாரதி, சுகேந்திரன், நா. குமார், சி. மூர்த்தி, ராஜா, என். கவிதா நாராயணன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமை தாங்குகிறார். மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கழக அயலக அணி தலைவர் மருத்துவர் கலாநிதி வீராசாமி, கே. பி. சங்கர் எம்எல்ஏ, ஜே. அருண் ஆகியோர் போட்டியை துவக்கி வைத்து பரிசுகள் வழங்குகிறார்கள்.

தமிழ்நாடு முழுவதும் இருந்து சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், மதுரை, திருச்சி, கடலூர் மற்றும் ஆந்திர மாநிலம் தடா ஆகிய இடங்களில் இருந்து சுமார் 32 அணிகள் இந்த போட்டியில் கலந்து கொள்கின்றன. போட்டியில் முதல் பரிசு,இரண்டாம் பரிசு,மூன்றாம் பரிசு, நான்காம் பரிசு என வெற்றி பெறும் அணிகளுக்கு ரூபாய் ஒரு லட்சம் மதிப்பிலான ரொக்க பணமும், கோப்பைகளும் வழங்கப்படுகின்றன.

மாவட்ட நிர்வாகிகள் மிசா மதிவாணன், வி. இராமநாதன், வி. கண்ணதாசன், வீ. கவி கணேசன், ஜி. சந்திர போஸ், ஆர். பத்மநாபன், குறிஞ்சி எஸ். கணேசன், மூ. ராஜேந்திரன், டி. ராமகிருஷ்ணன்,பா. அறிவழகி, எம். ஆனந்தன், தி .மு. தனியரசு, ஜி. துக்காராம், ஏ .வி. ஆறுமுகம், எஸ். நந்தகோபால், வை. ம.அருள்தாசன், மீ. வே. கருணாகரன், ஜி. தயாளன், ஜி. ராஜேந்திரன், ஜெ. ஜெயமதன் ,இரா. முருகேசன், என்.பரந்தாமன்,டி.ஏ. ராஜு, பி. சாந்தி, சி. அற்புதராஜ்,

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி மதன்குமார், லயன் வி. தியாகராஜன், சன் முனியாண்டி., எம். எம் .செந்தில், எஸ். ஏ. சீனிவாசன், கோமளவல்லி, அம்மு மூர்த்தி, டாக்டர் து. கோபால், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் சி. எஸ். எஸ். டி. சீனிவாசன், மோரை சதீஷ்குமார், டி.ஜி. ஆர். மணி வண்ணன், கேபிள் த. வே. கணேசன், ஜி.கே. இனியன், மஞ்சம்பாக்கம் ஆர். பாபு ,பி. ஜெயராஜ்,டி. வினோத் ,இ .எம். மனோகர்,ஜி. ராஜ்குமார், எஸ். உதயகுமார், கே. சண்முகப்ரியன், எஸ். கோபாலகிருஷ்ணன், எஸ். சிவக்குமார், மாத்தூர் கோபிநாத், சின்ன மாத்தூர் மணிகண்டன், துரை தசரதன், முகமது வசீம், கே . ஏழுமலை, எஸ். கருணாகரன், க. சரவணன், எச். பீர்முகமது, பி. குணசேகரன், எம். அமுதா, எஸ். கலைச்செல்வி,ஆர். சுதா, எஸ்.சுதா, டி. ஜெய்சங்கர், என். சந்திரன், டி. வெங்கடேசன், பேன்சி ரமேஷ், கா. சேரலாதன், எஸ். பார்த்தசாரதி, ஜெ. யுவராணி, எஸ். ஆர். சேகர் ராஜன், சி. ஹரிஷ், சுப்பிரமணி,

மாதவரம் வடக்கு பகுதி மகளிர் அணி அமைப்பாளர் எஸ். சுகாசினி,துணை அமைப்பாளர்கள் டி. அமலா, ராஜேஸ்வரி, என் .கவிதா நாராயணன், ஆர். ஜெயபாரதி, அத்திக்குளம் தேவி, பி .சரஸ்வதி, தா. மகாலட்சுமி, பகுதி மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் அபிதா முகமது அலி, ஜி. வயலட் ராணி, சகிலா, சாந்தி, பெரிய நாயகி, பார்கவி, கஸ்தூரி, சரஸ்வதி, பகுதி இளைஞரணி நிர்வாகிகள் ர. விஜய் ஆனந்த், எம். என். அஜய் தென்னவன், ஆ. விஜயன், கா. யுவராஜ் ,கோ. ராஜேஷ் கண்ணன், டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ் ,ஆ. சாந்தகுமார், வே. சிவப்பிரகாஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கிறார்கள். இறுதியாக எஸ். பாலாஜி,எம்.என். அஜய் தென்னவன் நன்றி கூறுகிறார்கள்.

இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் பகல் மற்றும் இரவு உணவு மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் வழங்கப்படுகிறது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்து வருகிறார்.